# நாடாளுமன்றத் தேர்தலில் ‘இந்தியா’ கூட்டணி வென்றிட வீரவணக்க நாளில் சூளுரைப்போம்!

## பல்லவபுரம் - மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!

பல்லவபுரம், ஜன. 27 –

**நாடாளுமன்றத் தேர்தலில் ‘இந்தியா’ கூட்டணி வென்றிட சூளுரைப்போம் என்று பல்லவபுரத்தில் நடைபெற்ற மொழிப்போர்த் தியாகிகள் நினைவு நாள் பொதுக்கூட்டத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.**

மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் பல்லவபுரத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது. இதில் கழக இளைஞர் அணிச் செயலாளரும், அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று எழுச்சி உரையாற்றினார்.

அந்த உரை வருமாறு:

“தமிழ் மொழியைக் காப்பதற்காகத் தங்களுடைய இன்னுயிரைத் தந்த மொழிப் போர்த் தியாகிகளுக்கு வீர வணக்கம் செலுத்துகின்ற வண்ணம் இந்தப் பொதுக் கூட்டத்தில் பங்கேற்கும் வாய்ப்பைத் தந்த கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த வீர வணக்கப் பொதுக்கூட்டத்தை அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்கள் மிகச் சிறப்பாக எழுச்சியோடு ஏற்பாடு செய்திருக்கிறார். ஆண்களுக்கு நிகராக... இல்லை இல்லை ஆண்களை விட அதிகமாக தாய்மார்கள், பெண்கள் பங்கேற்றுள்ளீர்கள். வாழ்த்துகள்.

**இளைஞர் அணி மாநில மாநாடு!**

நான்கு நாட்களுக்கு முன்புதான் சேலத்தில் இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாடு நடைபெற்று முடிந்தது. அன்பரசு அண்ணன் சொன்னது போல, 6 லட்சத்திற்கும் மேற்பட்ட இளைஞர்கள் அந்த மாநாட்டில் கலந்துகொண்டார்கள். மிகப் பெரிய வெற்றி மாநாடு.

ஒட்டுமொத்த இந்தியாவுமே அந்த மாநாட்டை உற்று நோக்கியது. ஒட்டுமொத்த இந்தியாவுமே சேலத்தை நோக்கி, என்ன நடக்கிறது என்று பார்த்துக் கொண்டிருந்தது. மாநாட்டில் சிறப்பான 25 தீர்மானங்களை நிறைவேற்றி இருக்கிறோம். இப்போது காஞ்சிபுரத்திலும் ஒரு மினி மாநாடு போல இன்றைக்கு இந்த வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்துக்கு ஏற்பாடு செய்த அண்ணன் அன்பரசன் அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துகள்.

**காஞ்சியிலிருந்து மாநாட்டுக்கு அதிக இளைஞர்கள்!**

சேலம் மாநாட்டிற்கு ஆறு லட்சத்துக்கு மேற்பட்ட இளைஞர்கள் வந்திருந்தார்கள். குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்றால் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்திலிருந்து அதிகமான இளைஞர்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள். அண்ணன் அன்பரசன் அவர்கள் நேற்று முன்தினம் இந்த நிகழ்ச்சிக்கு அழைப்பிதழ் கொடுப்பதற்காக வந்தார். அப்போது, என்னிடம் கேட்டார், `மாநாட்டுக்கு எத்தனை பேர் வந்தாங்கனு மாவட்டவாரியா செக் பண்ணிங்களாப்பா’ என்றார்.

‘எந்தெந்த மாவட்டத்தில் இருந்து எத்தனை எத்தனை பேருந்துகள், வாகனங்கள் வந்தன’ என்று போக்குவரத்துக் காவல்துறையை அழைத்து விவரம் கேட்டேன். அவர்கள் சொன்ன பட்டியலில் முதல் ஐந்து மாவட்டங்களில் இந்த காஞ்சிபுரம் வடக்கு மாவட்டமும் இருந்தது. அண்ணன் அன்பரசு எந்த நிகழ்ச்சி நடத்தினாலும், எடுத்துக்காட்டு நிகழ்ச்சியாக எழுச்சியோடுதான் நடத்துவார்.

**இளைஞர் அணிக்கு அதிக மதிப்பு!**

அதிலும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், இளைஞர் அணி நிகழ்ச்சிக்கு இன்னும் அதிகம் மதிப்பு கொடுப்பார். அதற்கு, அவர் இளைஞர் அணியிலிருந்து படிப்படியாக வளர்ந்து, இன்றைக்கு மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சராக இங்கு அமர்ந்திருப்பதுதான் காரணம்.

மாநாடு முடிந்த கையுடன் இன்றைக்கு நாம் மொழிப்போர்த் தியாகிகள், வீர வணக்கம் பொதுக்கூட்டங்களை தமிழ்நாடு முழுவதும் நடத்திக் கொண்டிருக்கிறோம். இதை நடத்திக் கொண்டிருக்கிற ஒரே இயக்கம் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம்தான். இங்கு நான் பேசிக் கொண்டிருக்கிற இதே நேரத்தில் நம்முடைய கழகத் தலைவர் அவர்கள் அண்ணா நகரில் பேசிக்கொண்டிருக்கிறார். அண்ணா பிறந்த காஞ்சிபுரம் மாவட்டத்தில் நான் பேசிக்கொண்டிருக்கிறேன். இது எனக்குக் கிடைத்த பெருமை.

**மொழியைக் காப்பாற்ற, போர் தொடுத்த ஒரே மாநிலம்!**

உலக வரலாற்றில் ஒரு மொழியைக் காப்பாற்ற, போர் தொடுத்த ஒரு மாநிலம் இருக்கிறதென்றால், அது தமிழ்நாடு மட்டும்தான். பொதுவாக, போரில் இரண்டு பக்கத்திற்கும் காயங்கள் ஏற்படும். ஆனால், இந்த போர் கொஞ்சம் வித்தியாசமானது. நாம் யாரை எதிர்த்துப் போர் செய்தோமோ அவர்கள் மீது ஒரு சிறு கீறல் கூட விழவில்லை. மாறாக, நம்முடைய எண்ணற்ற தியாகிகள் தமிழ் மொழியைக் காப்பாற்ற தங்களுடைய உயிரையே தியாகம் செய்தார்கள்.




காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகம் சார்பில் பல்லவபுரத்தில் நடைபெற்ற மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள் மாபெரும் பொதுக்கூட்டத்தில் கழக இளைஞரணிச் செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் எழுச்சியுரையாற்றினார். மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான தா.மோ.அன்பரசன் தலைமை வகித்து உரையாற்றினார். உடன் எம்.எல்.ஏ.க்கள் எஸ்.ஆர்.ராஜா, வரலட்சுமி மதுசூதனன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

1937 இல் பெரியார் அறிவித்த மொழிப் போராட்டம்தான் தமிழ்நாட்டினுடைய அரசியலையே புரட்டி போட்டது. அந்தப் போராட்டத்தில்தான் தாளமுத்து, நடராசன் எனும் இரண்டு பேர் தங்களுடைய உயிரை இழந்தார்கள். அந்தப் போராட்டம் நடக்கும்போதுதான் பள்ளி மாணவராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் பொது வாழ்க்கை அரசியலுக்கு வந்தார். முத்தமிழறிஞர் கலைஞரை அரசியலுக்குக் கொண்டு வந்தது இந்த மொழிப்போர்தான்.

அறுபதுகளில் இந்தி மொழிதான் ஆட்சிமொழி என்று அறிவித்தபோது தமிழ்நாட்டில் இரண்டாவது மொழிப்போராட்டம் ஆரம்பமானது. 1964 ஆம் ஆண்டு இதே ஜனவரி 25 ஆம் தேதி அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த கீழப்பழூரைச் சேர்ந்த சின்னச்சாமி, திருச்சி ரயில் நிலையத்துக்கு முன்பு வந்து, `தமிழ் வாழ்க! தமிழ் வாழ்க! இந்தி ஒழிக!’ என்று தன்னுடைய உடம்பில் தீக்குளித்து இறந்து போனார். அந்த நாளில்தான் ஆண்டு தோறும் மொழிப் போர் தியாகிகள் வீர வணக்கப் பொதுக்கூட்டத்தை நடத்திக்கொண்டு இருக்கிறோம்.

**திருச்சியில் - முத்தமிழறிஞர் கலைஞருக்கு சிலை திறப்பு!**

இன்றைக்கு காலையில், திருச்சியில் முத்தமிழறிஞர் கலைஞரின் திருவுருவ சிலையை நான் திறந்து வைத்தேன். திருச்சி மாவட்டக் கழகச் செயலாளர் பள்ளிக்கல்வி அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள் அந்த சிலையை மொழிப்போர் தியாகிகள் தினத்தில் தான் திறக்க வேண்டும் என்று கூறி இன்றைக்குத் திறந்து வைத்திருக்கின்றோம்.

1939 களில் தொடங்கிய இந்த மொழிப்போர் கிட்டத்தட்ட நூறு ஆண்டுகள் கழித்தும், தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. பாசிஸ்டுகள் அன்றைக்கும் ஹிந்தியை திணிக்க முயன்றார்கள். அதே பாசிஸ்டுகள் இன்றைக்கும் அந்த இந்தியை தமிழ்நாட்டின் மீது திணித்துக் கொண்டிருக்கிறார்கள்.

மொழி உரிமைதான் மாநில உரிமை. அதனால்தான் சேலத்தில் நடந்த இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாட்டிற்குப் பெயரை `மாநில உரிமைகள் மீட்பு மாநாடு’ என்ற பெயர் வைத்திருந்தோம். 25 தீர்மானங்கள் நிறைவேற்றினோம் அதில் பெரும்பான்மையானவை, மொழி உரிமை சார்ந்தும் மாநில உரிமை சார்ந்தும் தான் இருந்தன.

இன்றைக்கு என்னென்ன வழிகளில் இந்தி, சமஸ்கிருதத்தைத் திணிக்க முடியுமோ அந்தந்த வழிகளில் எல்லாம் ஒன்றிய அரசு மொழித் திணிப்பை மேற்கொண்டு வருகின்றது. எல்லாருக்கும் பொதுவான மொழி இந்தி தான் என்று நம் ஒன்றிய உள்துறை அமைச்சர் `இந்திதான் எல்லா மொழியையும் இணைக்கிறது’ என்று சொல்கிறார். இந்திதான் இந்தியாவின் அடையாளம் என்று சொல்கிறார். தமிழ்நாட்டிலிருந்து டெல்லி சென்ற ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் சில மாதங்களுக்கு முன்பு, என்ன சொன்னார் தெரியுமா?

தமிழ்நாட்டில் என்னை இந்தி படிக்கவே விடவில்லை என்று சொன்னார்கள். அப்பொழுதும் இந்த காஞ்சிபுரம் மாவட்டத்தில் நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில்தான் நான் பதில் சொன்னேன். ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்களே, அவருக்கு மரியாதை வேற கொடுக்க வேண்டும் தனியாக, இல்லையென்றால் கோபித்துக் கொள்வார்.

உங்களை யாரும் இந்தி படிக்கக்கூடாது என்று தமிழ்நாட்டில் சொல்லவே இல்லை. இன்னும் சொல்லப்போனால் உங்களுடைய பா.ஜ.க. அலுவலகம் பக்கத்தில்தான் இந்தி பிரச்சார சபாவே இருக்கிறது.

**பா.ஜ.க.விற்கு அல்வா கொடுக்கத் தயாராவோம்!**

பட்ஜெட்டிற்கு முன்பு எப்பொழுதுமே அந்த அம்மா அல்வா கிண்டுகிறார்கள். வழக்கம் போல் இந்தாண்டும் தமிழ்நாட்டிற்கு அல்வாவைத்தான் கொடுக்கப் போகிறார்கள். எனவே இந்த தேர்தலில் நாம் அத்தனை பேரும் பா.ஜ.க. விற்கு அல்வா கொடுக்க நீங்கள் தயாராக இருக்க வேண்டும்.

2024 இல் மீண்டும் பா.ஜ.க. வெற்றி பெற்றால் தமிழ்நாட்டிற்கு அல்வா தருவார்கள். அதனால் அவர்கள் அல்வா தருவதற்கு முன் நாம் அவர்களுக்குத் தந்துவிட வேண்டும். பிரதமர் ஒரு பக்கம் தமிழ்நாட்டில் எந்த நிகழ்ச்சி நடத்தினாலும் முதலில் ஆரம்பிக்கும் பொழுது திருக்குறள் தான் பேசுவார். அது யாருக்கும் புரியாது. கடைசி வரைக்கும் அவர் என்ன குறள் சொல்கிறார் என்று. ஒரு பக்கம் பொங்கல் கொண்டாடுவார். இன்னொரு பக்கம் ஒன்றிய அரசு அலுவலகங்கள் அஞ்சலகம், வங்கி போன்றவற்றுக்கு பொங்கலுக்கு விடுமுறை இல்லை என்று அறிவிப்பார்.

**கழக ஆட்சியில் எத்தனையோ திட்டங்கள்!**

இந்த இரண்டரை வருடத்தில் கழக ஆட்சி அமைந்த பிறகு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எத்தனையோ திட்டங்களை அறிவித்துச் செயல்படுத்தி இருக்கிறார். இதையெல்லாம் நீங்கள் மனதில் ஏற்றிக் கொள்ள வேண்டும். அதை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும்.

நாம் நம்முடைய சாதனைகள் சொல்லிக் கேட்கிறோம். இத்தனை சாதனைகள் செய்திருக்கிறோம் என்று நாம் சொல்கிறோம்.

**எய்ம்ஸுக்கு நிதி ஒதுக்கவில்லை!**

ஆனால் ஒன்றிய பா.ஜ.க.விற்குச் சொல்வதற்கு எதுவுமே இல்லை; ஏனென்றால் பத்து வருடமாக தமிழ்நாட்டிற்கு அவர்கள் எதுவுமே பண்ணவில்லை. அதற்கு சிறந்த உதாரணம் இப்போது வரைக்கும் எய்ம்ஸ் ஒரு செங்கல் தான் இருந்தது. அதையும் நான் தூக்கிக் கொண்டு வந்து விட்டேன். இப்போது வரைக்கும் நிதி ஒதுக்கவில்லை. ஒன்றிய பிரதமர் 2013இல் ஒரு வாக்குறுதி கொடுத்தார். 2020இல் இந்தியாவை நான் வல்லரசு நாடாக மாற்றிக் காட்டுவேன் அப்படி என்று சொன்னார். இப்போது திருப்பி 2047ல் நான் இந்தியாவை வல்லரசு நாடாக மாற்றிக் காட்டுவேன் என்று சொல்கிறார்.

ஆனால், ஒரே ஒரு விஷயத்திற்காக நாம் ஒன்றிய பிரதமரைப் பாராட்டியே ஆக வேண்டும். ஒன்றே ஒன்று சொன்னார் இந்தியாவையே நான் மாற்றிக் காட்டுவேன் என்று சொன்னார். இப்போது பெயரை மாற்றி விட்டார். இனிமே யாரும் இந்தியா என்று சொல்லக்கூடாது பாரத் என்று சொல்லுங்கள் என்று சொல்லிவிட்டார். கேட்டால் நான்தான் இந்தியாவை மாற்றுவேன் என்று சொன்னேன் அல்லவா என்கிறார்.

கோயில் கட்டினால், எங்கள் தமிழ்நாட்டு மக்கள் வந்து சாமி கும்பிட்டு விட்டுத்தான் போவார்கள். ஆனால், வாக்குச்சாவடிக்குச் சென்று உதயசூரியன் சின்னத்தில் தான் வாக்களிப்பார்கள். ஆன்மிகம் எது, அரசியல் எதுவென்று நம் தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றாகவே தெரியும். அதனால் தான் பா.ஜ.க மாதிரியான கட்சிகளை தமிழ்நாட்டிற்குள் நாம் நுழைய விட மாட்டோம் என்கிறோம்.

இங்கே இன்னொரு கோஷ்டி இருக்கிறது. அடிமை கோஷ்டி. நம் மாநாடு நடந்ததிலிருந்து ஒருவர் கூட வெளியே வரவில்லை. எங்கே என்று தெரியவில்லை. யாரையுமே காணோம். அதிலே பல அணிகள் இருக்கின்றன. ஓ.பி.எஸ் என்ன சொல்கிறார், `எடப்பாடி விரைவில் சிறைக்குப் போவார்’ என்று. எடப்பாடி என்ன சொல்கிறார். இல்லை இல்லை அவர்தான் முதலில் ஜெயிலுக்கு போகப் போகிறார் என்று அவர் சொல்கிறார்.

நான் சொல்கிறேன். விரைவில், நீங்கள் இரண்டு பேருமே சிறைக்குப் போகப் போவது உறுதி. அங்கேயும் உங்களுக்குப் பக்கத்துப் பக்கத்து சீட் கிடைக்கப்போவது உறுதி. உங்களிடம் ஒரே ஒரு வேண்டுகோள். ஜெயிலுக்கு போகும்போது கூட தவழ்ந்து தவழ்ந்து போகாதீர்கள்.

அதேமாதிரி சட்டசபையில் அடிக்கடி வெளிநடப்பு செய்து விடுவார்கள். அவர்கள் மக்கள் பிரச்சினையை சொல்லி இதுவரை ஒருமுறை கூட வெளிநடப்பு செய்ததில்லை. எனக்கு அவர் பக்கத்தில் இருக்கை ஒதுக்காதீர்கள், பின் வரிசையில் கொடுங்கள் என்பதுதான் பிரச்னை. ஸ்கூல் பசங்கள் எல்லாம் சண்டை போடுவார்களே அது மாதிரி. அதிலும் ஒருவர் எழுந்து பேசினால் மற்றொருவர் வேறொரு பக்கம் திரும்பி விடுவார்.

அ.தி.மு.க காரனுக்கு தேவை வெறும் இரண்டே இரண்டு கால்கள் மட்டுமே. ஏனென்றால் கால்களை வாரத்தான் அ.தி.மு.க.. மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா அம்மையார் இருந்த வரை அவருடைய காலில் விழுந்து கிடந்தார்கள். அந்த அம்மா இறந்த பிறகு சசிகலா அம்மையாரின் காலில் விழுந்து கிடந்தார்கள். அடுத்து அந்த அம்மாவின் காலையும் வாரி விட்டு, ‘நீயா என்னை முதலமைச்சர் ஆக்கினாய்’ என்று கேட்டார்கள். அதன் பிறகு ஓ.பி.எஸ். கொஞ்ச நாள் இருந்தார். அவருடைய காலை இவர் வாரிவிட்டார், இவருடைய காலை அவர் வாரி விட்டார்.

இப்படி காலை வாருகின்ற கட்சி தான் அ.தி.மு.க. என்பதை நீங்கள் உணர வேண்டும். இன்னொரு மிகுந்த நகைச் சுவையான நிகழ்ச்சி. தொலைக்காட்சியில் பார்த்திருப்பீர்கள். இரண்டு நாட்களுக்கு முன்பு அந்தக் கட்சியின் முன்னாள் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் பிறந்த நாள் விழா, திருப்பத்தூரில் அங்கு அந்த கட்சியின் நிர்வாகி போஸ்டர் அடிக்கிறார். எம்.ஜி.ஆர் போட்டோவிற்கு பதிலாக நடிகர் அரவிந்த்சாமியின் போட்டோவை அடித்து ஊர் முழுவதும் ஒட்டி விட்டார்கள். தன்னுடைய கட்சியின் தலைவரின் போட்டோ எதுவென்றுகூட தெரியவில்லை. எம்.ஜி.ஆரா அரவிந்த்சாமியா என்று குழம்பி போகின்ற கட்சி தான் அ.தி.மு.க. அந்த அளவில்தான் அக்கட்சி இப்போது இருக்கிறது.

**பா.ஜ.க.விடமிருந்து அ.தி.மு.க. விலக்கா? நம்ப மாட்டார்கள்!**

பா.ஜ.க கூட்டணியில் இருந்து விலகி விட்டோம் என்று சொல்கிறார்கள். ஆனால் மக்கள் அதை நம்பவே மாட்டார்கள். இன்றைக்கு அ.தி.மு.க.வின் முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் அவர்கள் பத்திரிக்கை சந்திப்பு. அதில் கேட்கிறார்கள் கூட்டணியை பற்றி, ‘அரசியலில் நிரந்தர நண்பனும் கிடையாது, நிரந்தர எதிரியும் கிடையாது’ என்கிறார். அதனால் அ.தி.மு.க.வின் தேசிய தலைமை தான் பா.ஜ.க. பா.ஜ.க.வின் மாநில கிளை தான் அ.தி.மு.க. என்பதை நான் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறேன். இதை மக்களிடம் கொண்டு போய் சேருங்கள்.

எனவே இவர்களையெல்லாம் நாம் விரட்டி அடிக்க வேண்டும். 2024 மக்களவைத் தேர்தலில் இரண்டு கட்சிகளையும் டெபாசிட் இழக்கச் செய்ய வேண்டும். இந்த மொழிப்போர் தியாகிகள் வீரவணக்கம் பொதுக்கூட்டத்தில் இன்னொரு முக்கியமான விஷயத்தை தெளிவு செய்ய விரும்புகின்றேன். இந்தி படிக்க வேண்டும் என்று யார் நினைக்கிறார்களோ அவர்களுடைய விருப்பத்திற்கு ஒருபோதும் நம்முடைய கழகம் தடையாக இருந்தது கிடையாது.

தமிழ்நாட்டில் பிறக்கின்ற எல்லா குழந்தைகளும் மூன்று மொழிகளை கட்டாயம் படிக்க வேண்டும் என்று சொல்லும் போது தான் நாம் அதை எதிர்க்கிறோம். தேசிய கல்விக் கொள்கை என்ற பெயரில் சமஸ்கிருத்தையும் இந்தியையும் நம் தமிழ்நாட்டு குழந்தைகள் மீது திணிக்கிறார்கள். நம்முடைய குழந்தைகள் எதற்கு மூன்று மொழி, நான்கு மொழி படிக்க வேண்டும். ஏற்கனவே நம்முடைய குழந்தைகள் இரண்டு மொழிகள் படித்து உலக சாதனை படைத்து கொண்டு வருகிறார்கள்.

அதுமட்டுமல்ல புதிய கல்விக் கொள்கையில் மூன்றாம் வகுப்புக்கு பொது தேர்வு வருகிறது. ஐந்தாம் வகுப்பிற்கு பொதுத் தேர்வு. இதை எல்லாவற்றையும் தி.மு.க. எதிர்த்து கொண்டிருக்கிறது. இப்போது இந்தியாவில் இருக்கக்கூடிய நூறு கல்வி நிலையங்களில் 18 கல்வி நிலையங்கள் தமிழ்நாட்டை சேர்ந்தவை. உயர்கல்வியில் சேரும் மாணவர்கள் GER என்று சொல்வார்கள். கிராஸ் என்ரோல்மென்ட் ரேசியோ. இந்தியாவியேயே தமிழ்நாடுதான் அதில் இரண்டாவது இடம். 51 சதவிகிதம்.

**‘இந்தி இல்லாமலேயே ஏராளமான சாதனைகள்!**

எனவே கல்வியில் நாம் ஏற்கனவே மிகப்பெரிய சாதனை செய்து கொண்டிருக்கிறோம். இந்தி என்ற பாடம் இல்லாமலேயே இதையெல்லாம் நாம் சாதித்து காட்டியிருக்கிறோம். தமிழ்வழிக் கல்வியில் படித்த மயில்சாமி அண்ணாதுரை, வீரமுத்துவேல், நிகர் ஷாஜி போன்ற இஸ்ரோ விஞ்ஞானத்தை உருவாக்கியது நம்முடைய தமிழ்நாடு அரசு பள்ளிகள். இரு மொழி கல்வி பயின்ற நம்முடைய தமிழ்நாட்டு மாணவர்கள் இன்றைக்கு அமெரிக்காவில் google, மைக்ரோசாஃப்ட் போன்ற நிறுவனங்க ளில் தலைமைப் பொறுப்பில் பணியாற்றி கொண்டிருக்கிறார்கள்.

இந்தி திணிப்பை போலவே இப்போது அடுத்து நீட், நெக்ஸ்ட் என்று அனைத்து நுழைவுத் தேர்வுகளையும் தமிழ்நாட்டிற்குள் திணிக்கிறார்கள். நீட் தேர்வு உங்களுக்கு தெரியும். அனிதாவில் ஆரம்பித்து குரோம்பேட்டை ஜெகதீசன் என்ற மாணவரை 21 குழந்தைகளை இழந்திருக்கிறோம். முதல் நாள் ஜெகதீசன் தற்கொலை பண்ணி கொள்கிறார். எழுதி வைத்துவிட்டு என்னால் நீட் தேர்வில் தகுதியில்லை என்று சொல்லிவிட்டார்கள். டாக்டராக முடியவில்லை என்று நான் தற்கொலை பண்ணி கொள்கிறேன் என்று எழுதி வைத்துவிட்டு ஜெகதீசன் இறந்துவிட்டான். அடுத்த நாள் அவனுடைய அப்பாவும் தற்கொலை செய்துள்ளார், ஒரு குடும்பத்தையே இந்த நீட் தேர்வுக்கு நாம் இழந்திருக்கிறோம்.

**நீட் ரத்து வலியுறுத்தி 85 லட்சம் கையெழுத்து!**

நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்று. தொடர்ந்து போராட்டம் பண்ணிக் கொண்டிருக்கிறோம். சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றினோம். ஆனால் இன்னும் குடியரசுத் தலைவர் ஒத்துக்கொள்ளவில்லை. அதை இப்போது மக்கள் போராட்டமாக மாற்ற வேண்டும் என்று தான் தலைவர் அவர்களின் அனுமதியோடு 50 நாட்களில் 50 லட்சம் கையெழுத்துக்கள் வாங்க போகிறோம் என்று சொன்னோம். இப்பொழுது 85 லட்சம் கையெழுத்துக்களை தமிழ்நாட்டு மக்களிடமிருந்து நாம் வாங்கி இருக்கிறோம்.

மாநாட்டில் தலைவரிடம் ஒப்படைத்து இருக்கிறேன். விரைவில் டெல்லி சென்று குடியரசுத் தலைவரை சந்தித்து கொடுக்க இருக்கின்றார். எனவே நீட் தேர்வு ஒழியும் வரை தமிழ்நாட்டு மக்களுடைய போராட்டம் ஒழியாது. அதேபோல தமிழ்நாட்டில் உள்ள ஒன்றிய அரசின் வேலை வாய்ப்புகளை எல்லாம் இப்போது ஹிந்தி பேசுகின்ற மக்களை வேண்டுமென்றே திணிக்கிறார்கள். விமான நிலையங்கள், ரயில் நிலையங்கள், வங்கிகள், பொதுத்துறை நிறுவனங்கள் உள்ளிட்ட எல்லா அலுவலகங்களிலும் இந்தி மயமாக்க முயற்சிக்கிறார்கள்.

சமீபத்தில் நடந்த ஒரு சம்பவம் கோவா விமான நிலையத்தில் சென்ற ஒரு தமிழ்ப் பெண் பெயர் சர்மிளா. பாதுகாப்பு அதிகாரிகள் அந்த பெண் ஹிந்தி பேச வேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள். அதை எதிர்த்து அந்த சகோதரி ஷர்மிளா அங்கே குரல் கொடுத்தார். அவரைப் போல இன்னும் பல சர்மிளாக்கள் விமான நிலையங்களிலும், ரயில் நிலையங்களிலும், அஞ்சல் நிலையங்களிலும் குரல் கொடுக்க வேண்டும். இந்த நிலை இனியும் தொடரக்கூடாது என்று தான் தமிழ்நாட்டில் உள்ள ஒன்றிய அரசு பணிகளுக்கு தமிழர்களுக்கு முன்னுரிமை தர வேண்டும் என்று இளைஞர் அணி மாநாட்டில் மிக முக்கியமான ஒரு தீர்மானத்தை நிறைவேத்திருக்கிறோம்.

**இந்தியை திணித்து மாநில மொழிகள் அழிப்பு!**

இரண்டு நாட்களுக்கு முன்பு பா.ஜ.க.வின் அபிசியல் வெப்சைட்டில் என் போட்டோவை போட்டு ஹிந்தியில் ஏதோ ஒரு எழுதி இருந்தார்கள். நான் உடனே ஹிந்தி தெரியாது போ என்று பதிலளித்தேன். இனிமேல் யாராவது வந்து நம்மை இந்தி படிக்க வேண்டும் என்று திணித்தால் நீங்கள் சொல்ல வேண்டும் ‘உங்களுக்கு ஓட்டு கிடையாது போ’ என்று.

இந்த மக்களவைத் தேர்தல் மிக மிக முக்கியமான தேர்தல். இந்த தேர்தலில் பாஜக மீண்டும் வெற்றி பெற்றது என்றால் மாநிலங்களின் அதிகாரங்கள் அத்தனையும் பறித்து விடுவார்கள். மாநில மொழிகளை அழித்து ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே உணவு என்று இந்தியாவின் அந்த பன்முகத்தன்மையை சிதைத்து கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு மொழி உண்டு தாய்மொழி உண்டு.

பீகாரில் பிகாரி என்று ஒரு மொழி உண்டு. ராஜஸ்தானில் ராஜஸ்தானி என்று ஒரு மொழி உண்டு. குஜராத்தில் குஜராத்தி என்று ஒரு மொழி உண்டு. அதேபோல் மராத்தியில் என. ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒவ்வொரு மொழி இருந்தது. எப்படி தமிழ்நாட்டிற்கு தமிழ் என்ற ஒரு மொழி இருக்கிறதோ கேரளாவில் மலையாளம் இருக்கிறதோ ஆந்திராவில் தெலுங்கு இருக்கிறதோ ஆனால் இப்போது பார்த்தீர்கள் என்றால் இந்த பிகாரி, ராஜஸ்தானி, குஜராத்தி, மராத்தி எல்லாம் இந்தியை திணித்து அந்த மொழிகளையே அழித்து விட்டார்கள்.

இப்போது அந்த மாநிலங்களில் எல்லாம் ஹிந்தி தான் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இந்தியையும் சமஸ்கிருதத்தையும் திணிக்க நீங்கள் எவ்வளவு முயற்சித்தாலும் தமிழ்நாட்டில் அது நடக்கவே நடக்காது. ஏனென்றால் இது பெரியாரின் மண், இது முத்தமிழறிஞர் கலைஞரின் மண், பேரறிஞர் அண்ணாவின் மண் மிக முக்கியமாக நான் சொல்வது இங்கு நடைபெற்றுக் கொண்டிருப்பது முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்னும் ஒரு மாபெரும் தலைவரின் திராவிட மாடல் ஆட்சி.

இது உங்களைப் போல தவழ்ந்து, தவழ்ந்து வந்த ஆட்சி கிடையாது. கடைசி தி.மு.க காரன் உயிரோடு இருக்கும் வரை இந்த மண்ணில் கருப்பு சிவப்பு கொடி பறக்கின்றவரை அண்ணா மீதும், கலைஞர் மீதும், கழகத் தலைவர் மீதும் பற்று வைத்திருக்கக் கூடிய கழகத்தின் கடைசி உடன்பிறப்பு இருக்கின்ற வரை பா.ஜ.கவின் இந்த எண்ணம் இங்கே பலிக்கவே பலிக்காது. இந்த எம்.பி தேர்தல் இன்னும் 55 நாட்கள் தான் இருக்கிறது. இன்னும் இரண்டு மூன்று நாட்களில் அறிவிப்பு வந்துவிடும் என்று சொல்கிறார்கள். எனவே மிக மிக முக்கியமான தேர்தல். நிதி கொடுக்க மறுக்கிறார்கள். நாடாளுமன்ற தேர்தலில் வெறும் எம்.பி தேர்தல்தான், பிரதமர் தேர்தல் தான் என்று விட்டு விடக்கூடாது. இந்த தேர்தலின் வெற்றி அடுத்த 2026 தேர்தலில் எதிரொலிக்கும். நம்முடைய தலைவர் மீது மிகுந்த நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். நல்ல பணிகளை நாம் செய்திருக்கிறோம்.

நலத்திட்ட உதவிகள் எல்லாம் செய்து இருக்கிறோம். தேர்தல் வாக்குறுதிகளையெல்லாம் நிறைவேற்றி இருக்கிறோம். மக்கள் தயாராக இருக்கிறார்கள். நாம் தான் ஒற்றுமையோடு இருந்து நம்முடைய சாதனைகளை மக்களிடம் கொண்டு சேர்த்து அந்த மிகப்பெரிய வெற்றியை நாம் தேடி கொடுக்க வேண்டும். அதற்கு கழக நிர்வாகிகள் நீங்கள் அத்தனை பேரும் ஒற்றுமையோடு இருந்து தேர்தல் பணிகளை ஆற்ற வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

2021 இல் தமிழ்நாட்டை பாசிஸ்ட்டுகள் அடக்கி வைத்த அடிமைகளை விரட்டினோம். 2024 இல் உங்களை பாசிஸ்ட்டுகளை, அடிமைகளின் ஓனர்ஸ்களையும் சேர்த்து துரத்தி அடிப்போம். ஹிட்லரின் தோல்வி ஸ்டாலினிடம்தான் என்ற வரலாற்றை மீண்டும் ஒருமுறை நிரூபிப்போம்.

2024 மக்களவைத் தேர்தலில் இந்தியா கூட்டணியை வெல்ல செய்வோம். மொழிப்போர் தியாகிகளின் புகழ் ஓங்கட்டும், அவர்களுக்கு நாம் அனைவரின் வீர வணக்கத்தை செலுத்தி இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட கழக செயலாளரும் அமைச்சருமான தா.மோ.அன்பரசன், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர்.ராஜா, வரலட்சுமி மதசூதனன், மாவட்ட துணை செயலாளர் மூர்த்தி, மாவட்ட பொருளாளர் விஸ்வ நாதன், தீர்மானக் குழு செயலாளர் வைதிய லிங்கம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தமிழ்மணி, அன்பு செழியன், ஆதிமாறன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் படப்பை மனோகரன்,

மாவட்ட ஊராட்சி தலைவர் செம்பருத்தி துர்கேஷ், மேயர், வசந்தகுமாரி, துணை மேயர் காமராஜ், இறையன்பன் குத்தூசு, கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் தமிழ்மாறன், இமயவர்மன், வரவேற்புரை ஆற்றிய நகர கழக செயலாளர் பிரபு, எம்.கே.டி.கார்த்திக், நன்றியுரை ஆற்ற உள்ள மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு பிரகாஷ், மாநகர அமைப்பாளர் எல்.பிரபு, மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் சத்யம், துணை அமைப்பாளர்கள் தையூர் விஜய குமார், ராமமூர்த்தி, மணிகண்டன், ஜானகிராமன், மாநகர துணை அமைப்பாளர்கள் இந்துமான், பிரபு, கார்த்திக் சிவ சுப்ரமணியன், ராஜேஷ் உள்பட பலர் கலந்துகொண்டனர்.